அசல் வழக்கு எண்.24/2019		வா. சா . 1	தேதி.10.1..2023	
பெயர்	திருமதி. உமாமகேஷ்வரி		வயது	40
க/பெ.	திரு.சண்முகம்		முகவரி	7/199, கீழ்கதவுக்கரை , காரேகவுண்டன்புதூர்
வட்டம்	கோயமுத்தூர்		மாவட்டம்	கோயமுத்தூர்
			தொழில்	

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

9. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் அட்டையிலுள்ள கையெழுத்து என் கணவருடையது என்றால் சரிதான். அந்த கையெழுத்து மட்டும் பி சா ஆ. 1. (அஞ்சல் ஒப்புகைஅட்டையிலுள்ள கையொப்பம் மட்டும் குறியீடு செய்யப்பட்டது). நானும் என் கணவரும் சிறுமுகையில் எஸ் ஆர் எஸ் நகரில் கதவு எண். 12/439 எப் 2-ல் இன்றைய தேதியிலும் ஒன்றாகதான் வசித்து வருகிறோம் என்றும் நானும் என் கணவரும் கூட்டு சேர்ந்து பிரதிவாதிகளின் உரிமையை மறுப்பதற்காக இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த முகவரியில் என் கணவர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை இதுதானா என்றால் அது எனக்கு தெரியாது.

10. அதே முகவரியில் நானும் வசித்து வருகிறேன் என்றும் அதே முகவரிக்கு எனக்கும் 12.11.2022 அன்று ஒரு அறிவிப்பு அனுப்பபட்டு அதை நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த முகவரியில் குடியிருந்து கொண்டு வாங்கமாட்டேன் என மறுத்ததால்தான் அந்த உரை அவ்வாறு திருப்பபட்டுள்ளது என்றும் உண்மையில் நான் அந்த முகவரியில் இல்லாதபட்சத்தில் அவ்வாறு திருப்பபட வாய்ப்பே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர் 3 ம் பிரதிவாதியின் மீது இந்த நீதிமன்றத்திலும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி நடத்தி வரும் 6 ம் பிரதிவாதி நிறுவனமான பி எஸ் ஜி டெக்ஸ்டைல் நிறுவனத்தை நடத்தக்கூடாதென பரிகாரம் வேண்டி என் கணவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது அவர்களது அண்ணன் தம்பி பிரச்சினை.

11. வழக்குச் சொத்துக்களை பொறுத்து என் கணவர் என்னென்ன வழக்குகளை

3-ம் பிரதிவாதியின் மீது தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. பழனிக்கவுண்டரின் உடன்பிறந்தவர்கள் அனைவரும் அவர்களுக்கிடையே பாகம் பிரித்து அவரவர்கள் பட்டா பெற்று தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்குச் சொத்துக்கள் பழனிக்கவுண்டருக்கு எப்படி வந்ததென்றால் அவரது அப்பாவிடம் இருந்து வந்தது. வழக்குச் சொத்துக்களின் ஒரு பகுதியை பழனிக்கவுண்டர் சுயமாக 27.05.1964 ல் கிரையம் பெற்றார் என்றால் அது எனக்கு சரியாக தெரியாது. பழனிக்கவுண்டருக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அவர்களுள் என் மாமனார் பொன்மலைச்சாமி ஒரு மகன். பெரிய மாமனார் சுப்பைய ன் ஒரு மகன் என்றால் சரிதான்.

12. என் மாமனாருக்கும் பெரிய மாமனாருக்கும் அவர்களது தந்தையான பழனிக்கவுண்டர் 20.12.1993 ல் உயில் ஆவணத்தின் மூலம் சொத்துக்களை தனித்தனியாக பிரித்து கொடுத்து விட்டார் என்றால் சரிதான். உயில் சாசனத்தில் பி பட்டிகை சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்து என் மாமனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். உயில் சாசனப்படி பிரிந்த சொத்துக்களை சுப்பையனும் பொன்மலைச்சாமியும் தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். புல எண்கள். 291/5, 295/5, 307/2 சி, 294/4, 294/6, 294/9, 295/10, 295/11 ஆகிய சொத்துக்கள் குமார கவுண்டர் மூலம் பழனிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இந்த சொத்துக்களை பொறுத்து 2006 ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்ய வேண்டுமென்று என் கணவர் மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எங்களது திருமணத்திற்கு முன்பாக அவ்வாறு ஒரு வழக்கு தாக்கல் செய்ததாக எனது கணவர் என்னிடம் சொல்லி உள்ளார்,.

13. அந்த வழக்கில் குமார கவுண்டர் மூலம் பழனிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்துதான பாகம் கேட்டுள்ளார் என்றும் பழனிக்கவுண்டர் சுயமாக ரையம் பெற்று என் மாமனாருக்கு உயில் எழுதி வைத்த சொத்தை பொறுத்து பாகம் கேட்கவில்லையென்றால் சரிதான். அது என் மாமனார் பெயரில் தனிப்பட்ட முறையில் இருந்ததால் பாகம் கேட்கவில்லை. அந்த சமயத்தில் பாகப்பிரிவினை கோரும்போது அந்த சொத்திற்கு என் கணவர்., என் மாமனார். 3 ம் பிரதிவாதியாகிய என் கொளுந்தனார் ஆகியோர்தான் அந்த சொத்திற்கு வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபிறகு அம்மூவரும் சமாதானமாகி அந்த சமாதானத்தின்படி வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதென்றால் எங்கள் கல்யாணத்திற்கு முன்பாகவே அது நடந்துள்ளது. என் கணவர் சொல்லி எனக்கு அது தெரியும்.

14. அந்த வழக்கில் என் கணவருக்கு புல எண். 295/5, 307/2 சி ஆகிய சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதென்றால் சரிதான். என் கொளுந்தனாருக்கு புல எண்கள் 291/5, 294/4, 294/6, 294/9, 295/10, 295/11 ஆகிய சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட பாகப்பிரிவினை உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோது எனக்கு திருமணம் ஆகவோ இவ்வழக்கின் வாதிகள் பிறக்கவோ இல்லை என்றால் சரிதான். வாதிகள் அப்போது பிறக்காத காரணத்தால் பாகப்பிரிவினை முடிந்து அவரவர்கள் அனுபவத்திற்கு எடுத்த சொத்தில் பாகப்பிரிவினை கேட்க இயலாது என்றால் சரியல்ல. நீதிமனற்த்தில் தீர்ப்பானபிறகு என் கணவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில்தான் 4 ம் பிரதிவாதி நிறுவனத்தை என் கணவர் நடத்தி வருகிறார் என்றால் என் மாமனாரும் என் கணவரும் கூட்டாக நடத்தி வந்தார்கள். என் கணவர்தான் அதில் மேலாண்மை இயக்குநர் என்றால் இருவரும் சேர்ந்து நடத்தி வந்தார்கள்.

15. பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்து என்பதாலும் அவரது தனிப்பட்ட சொத்து என்பதாலும்தான் என் கணவர் அதில் நிறுவனம் நடத்தி வருகிறார் என்றால் இரண்டுபேரும் சேர்ந்துதான் நடத்தி வருகிறார்கள். அந்த நிறுவனத்திற்கு ஆந்திரா வங்கியில் கடன் வாங்கியிருந்தார்கள். அந்த கடனுக்கும் என் கொளுந்தனாராகிய 3 ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். 2012 ம் ஆண்டில் என் மாமனாருக்குரிய சொத்தில் அவர் 6 ம் பிரதிவாதி நிறுவனத்தை ஆரம்பித்தார் என்றால் என் கணவரும் என் கொளுந்தனாரும் சேர்ந்து என் கொளுந்தனார் பெயரில் ஆரம்பித்தார்கள்.

16. வழக்குச் சொத்தில் 2 மில்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த மில்லின் விலை எவ்வளவு இருக்கும் என்றால் நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருக்கும் பொழுதே 2012 ம் ஆண்டிலேயே ரூ. 1-1/2 கோடி போட்டு அந்த மில்லை கட்டினார்கள். அந்த 2 மில்களும் வழக்குச் சொத்தில் இன்னும் உள்ளது என்றால் சரிதான். மொத்தமாக எத்தனை ஏக்கர் நிலத்தில் பாகப்பிரிவினை கேட்கிறோம் என்றால் 7-1/2 ஏக்கரில்.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/-பெ.க. சிவக்குமார்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.